**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**

**அசல் வழக்கு எண் : 110/2019**

**நாள் : 30/08/2023, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வெங்கடேஸ் என்கிற வெங்கடேசன் | த/பெயர் - கேசவரெட்டி |
| வயது - 53 | தொழில் - |
| விலாசம் - லிங்கபையன் பேட்டை கிராமம், பெரும்பேடு அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**முதல் விசாரணை (PW1)**

நான் வழக்கின் வாதி. என்னுடைய நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். 05/08/2016 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண்.436 வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18/03/2019 தேதியிட்ட சிட்டா மற்றும் அடங்கல் ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டு ஆட்சேபணையுடன் வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07/04/1977 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி தாயார் பெயரிலுள்ள மின் இணைப்புக்கான வெள்ளை அட்டை வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25/02/2019 தேதியிட்ட புகார் மனுவின் நகல் தாக்கல் செய்யப்பட்டு ஆட்சேபணயுடன் வா.த.சா.ஆ.6

ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26/03/2019 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆ-அட்டவணை சொத்தில் ஆக்கிரமித்து கட்டிய கட்டிடத்தின் புகைப்படம், ரசீது மற்றும் குறுந்தகடு வா.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை, வரைபடம் மற்றும் இணைப்பு நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**